# மொறட்டுவை மாநகரசபை
# கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 19 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 17 ஆந் திகதியன்று மாநகர முதல்வருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மொறட்டுவை மாநகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படாது விடல்**

பின்வரும் தவிர்ப்புகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 ஜுலை – 2011 டிசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய உள்ளூராட்சி ஓய்வூதிய உதவுதொகை நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய ரூபா 2,246,530.

(ii) சம்பளமற்ற லீவுக்காக 33 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 225,615.

(iii) முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்குமான கொடுப்பனவு செய்ய வேண்டி கணக்காய்வுக் கட்டண நிதியேற்பாடு.

(iv) கழிவு முகாமைத்துவ அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ஒரு கைடிரக்டர், ஒரு டிரெய்லர் மற்றும் மோட்டார் படகொன்றினது மொத்தப் பெறுமதியாகிய ரூபா 795,000.

**(ஆ) கணக்குகளில் குறைத்துக் காட்டப்படுதல்**

பின்வருவன குறைவாகக் கணக்கிலிடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு,

(i) தீர்வைக்காக வழங்கப்பட்ட தரகு ரூபா 1,999,700

(ii) பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டியாகிய ரூபா 274,626

(iii) சேமிப்பு முதலீட்டுப் பெறுமதியான ரூபா 22,970

(iv) செலவினக் கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 16,644,033

**1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களில் காணப்படும் 17 கணக்கீட்டு விடயங்களின் புள்ளி விபரம் மற்றும் உபதிவேடுகளில் காணப்படும் புள்ளிவிபரம் என்பவற்றுக்கிடையே ரூபா 74,796,788 கூட்டுத்தொகையுடைய வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான கொடுப்பனவு செய்யவேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 114,788,977 ஆகும். அதனுள் இருந்த ரூபா 4,141,950 மீதியானது 10 ஆண்டுகளைக் கடந்துவிட்டதாகும்.

(ii) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 50,744,483 ஆகும். எனிதும், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா

51,437,353 ஆகும். இவ்வைப்பு மீதிகளில் 3 ஆண்டுகளைக் கடந்துவிட்ட மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 27,981,052 ஆகும். 5 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடையேயான காலப்பகுதிக்குரிய மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 22,379,222 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பதில் கிடைக்கப் பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டிற்கென வழங்கப்பட்ட 6 கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் முன்னைய 5 ஆண்டுகளுக்கென வழங்கப்பட்ட 15 கணக்காய்வு ஐய வினாக்கள் என்பவற்றிற்கு 2012 ஜுலை 17 அந் திகதியளவிலும் பதில் கிடைக்கப்பெறவில்லை. மீளாய்வாண்டின் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு இலக்காகிய கணிப்பிடப்பட முடியாத கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 2,567,702 ஆகும்.

(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 274,376,111 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(இ) கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

ரூபா 6,146,521 கூட்டுத்தொகையுடைய 40 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாநகர சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 889,564 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 29,406,241 ஆகும்.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

கீழே குறிப்பிடப்பட்ட நிதிசார் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 3,167,577 கூடுதலாக வங்கிப் பற்று வட்டியாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது 162.25 சதவீத அதிகரிப்பாகும்.

(ஆ) ஒருவங்கிக் கணக்கில் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 45,908 மீதி செயலற்றவாறிருந்தது.

(இ) வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்துவிட்ட ரூபா 839,003 கூட்டுத்தொகையுடை 18 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 2011 பெப்ரவரி 22 தொடக்கம் டிசெம்பர் 27 வரையான காலப்பகுதியின் போது வரையப்பட்ட ரூபா 94,065 கூட்டுத்தொகையுடைய 5 காசோலைகள் 2012 ஏப்ரல் 23 ஆந் திகதியன்றும் அவற்றிற்குரியவர்களிடம் ஒப்படைக்கப்படாது விடய எழுதுவினைஞரின் பொறுப்பில் இருந்தன.

(உ) மீளாய்வாண்டின் செலவிற்கென பொதுக் கணக்கிலிருந்து வரையப்பட்ட ரூபா 4,418,761 கூட்டுத்தொகையுடைய 12 காசோலைகள் மற்றும் ஊழியர் கடன் கணக்கிலிருந்து வரையப்பட்ட ரூபா 1,458,245 கூட்டுத்தொகையுடைய 02 காசோலைகள் என்பவற்றுடன் பன்முகப்படுத்தப்பட்ட நிதியக் கணக்கிலிருந்து வரையப்பட்ட ரூபா 338,924 கூட்டுத்தொகையுடைய 8 காசோலைகளும் அவ்வங்கிக் கணக்குகளில் போதிய பணமீதி இன்மையால் கையெழுத்திடப்படாது விடய எழுதுவினைஞரின் பொறுப்பில் இருந்தன.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மாநகரசபை முதல்வரால் மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 85,717 | 42,389 | 131,315 |
| (ii) | குத்தகை வாடகை | 8,059 | 6,655 | 4,108 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 14,435 | 6,834 | 43,057 |
| (iv) | பிற வருவாய் | - | 263,883 | - |

மீளாய்வாண்டிற்கென மதிப்பிடப்பட்ட தீர்வை, குத்தகை வாடகை மற்றும் அனுமதிப் பத்திரக் கட்டணத்தில் 52% மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.2 வியாபார வரி

மீளாய்வாண்டின் பொருட்டு 2,332 நிறுவனங்களிடமிருந்து வரி அறவிடப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தபோதும், 945 நிறுவனங்களிடமிருந்து மாத்திரமே வரி அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 1,387 அல்லது 59.47 சதவீதமான நிறுவனங்களிடமிருந்து வரி அறவிடப்படாதிருந்தது. வியாபார வரி நிலுவை மீதி ரூபா 3,418,700 ஆகும். அதனை அறவிடுவதற்கு மாநகரசபை கட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.3 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டில் 2,350 வர்த்தக நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தபோதும், 108 வர்த்தக நிலையங்கள் மாத்திரமே அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருந்தன. அதற்கமைய 95.4 சதவீதமான 2,242 வர்த்தக நிலையங்கள் அனுமதிப்பத்திரமின்றி வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை மீதி ரூபா 24,161,855 ஆகும் என நிதிசார் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

(அ) கீழே விபரிக்கப்பட்ட வாகனங்களும் இயந்திரங்களும் நெடுங்காலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அவ்வாகனங்களும் இயந்திரங்களும் மீண்டும் பழுதுபார்க்கப்படவோ அல்லது கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

| | வாகனம்/ இயந்திரம் | | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | டிறக்டர் | 08 | 3,043,000 |
| (ii) | கொம்பெக்டர் | 02 | 6,812,730 |
| (iii) | தீயணைக்கும் வாகனம் | 01 | 100,000 |
| (iv) | மோட்டார் சைக்கிள் | 01 | 35,000 |
| (v) | தெரு உருளை | 01 | 4,630,000 |
| (vi) | தெரு உருளை | 02 | பெறுமதி குறிப்பிடப்பட வில்லை. |
| (vii) | கலி பவுசர் | 02 | 1,500,000 |
| (viii) | செயின் டோசர் | 01 | 500,000 |

(ஆ) தீயணைக்கும் படைக்குப் பெறப்பட்ட ரூபா 4,304,195 பெறுமதியான 3 தீயணைக்கும் இயந்திரங்களும் ரூபா 4,000,000 பெறுமதியுடைய நீர் பவுசர் ஒன்றும் ரூபா 3,237,442 பெறுமதியுடைய இரு அம்புலன்சு வண்டிகளும் நீர் வழங்கல் சபையால் வழங்கப்பட்ட ரூபா 4,000,000 பெறுமதியான நீர் பவுசர் ஒன்றும் தீயணைக்கும் கூறொன்று நிறுவப்படாமையால் பயனற்றிருந்தன.

## 2.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் அதற்கான திருத்த அதிகாரச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உதவுதொகை செலுத்தப்படாததால் 1999 ஜுன் முதல் 2010 ஜுன் வரையான காலப்பகுதிக்கு தண்டப்பணமாக மீளாய்வாண்டில் ரூபா 285,247 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 218 ஆம் பிரிவின் படி மாநகரசபையின் ஒவ்வொரு ஆண்டினது நிர்வாகம் தொடர்பான அறிக்கை நிதிசார் கூற்றுக்களுடன் மாநகரசபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 5,784,942 ஆகும்.

(இ) 2010 ஆகஸ்ட் 25 ஆந் திகதியன்று மின்சாரம் மற்றும் எரிபொருள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கமைய, மாநகரசபை எல்லைக்குள் பொருத்தப்பட்டுள்ள அதிகாரமற்ற 2,489 வீதி விளக்குகள் முறைப்படுத்தப்படுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் மின்சாரக் கம்பனி அவற்றை அதிகாரமற்ற வீதி விளக்குகளாகக் கருதியிருந்தது. மீளாய்வாண்டு முடிவில் அதிகாரமற்ற விளக்குகளின் பொருட்டுப் பெற வேண்டிய ரூபா 8,631,016 பெறப்படுவது நிச்சயமற்றதாகியது.

(ஈ) 2006 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னரும் பெறப்பட்ட ரூபா 2,600,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய 2 அம்புலன்சு வண்டிகள் பதிவு செய்யப்படுவதும் கண்க்கிலிடப்படுவதும் மீளாய்வாண்டு முடிவிலும் நடைபெறாதிருந்தது.

(உ) 1993 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்த) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 37 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இலக்கம் II எனும் மாதிரிப் படிவத்தில் அனுப்பிவைக்கப்பட வேண்டிய மாதாந்த அறிக்கை அனுப்பிவைக்கப்படுவதில் நீண்ட தாமதம் நிலவியது.

(ஊ) 1999 ஆம் ஆண்டின்போது ரூபா 3,406,365 ஆகுசெலவில் கொள்வனவு செய்யப்பட்ட 226-2026 ஆம் இலக்க கொம்பெக்டர் வாகனம் எதுவிதி உடன்படிக்கையுமின்றி 2010 ஒக்டோபரில் பொரலஸ்கமுவ நகரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(எ) ஒன்றிணைந்த திட்டம் மற்றும் ஒன்றிணைந்த திட்டத்திற்கு அனுசரணையாக செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்படவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பள மீளளிப்பாகிய 15% விடுவிக்கப்படுவதற்காக உள்ளூராட்சித் திணைக்களம் அறிமுகஞ் செய்த விதிமுறைகளை ஈடேற்ற முடியாமையால் நிறுத்திவைத்த தொகையான ரூபா 10,462,646 விடுவிக்கப்படுவது மறுக்கப்பட்டிருந்தது.

(ஐ) 1962 மார்ச் 29 அந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தில் விதிக்கப்பட்ட 7(2)(பீ) கட்டளைப் பிரகாரம், 2006 ஆம் ஆண்டு தொடர்பாக அறவிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட உதவு தொகை சம்பந்தமான விபரங்களடங்கிய சீ(3) மாதிரிப்படிவத்திற்கமைய, ஆறுமாத அறிக்கை 2012 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் அனுப்பி வைக்கப்படாமையால், அறவிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட உவுதொகை ஒவ்வொரு அங்கத்தவரதும் தனிப்பட்ட கணக்கில் ''செலவு'' வைக்கப்படாததுடன் அத்தொகை தொங்கற் கணக்கில் ''செலவு'' வைக்கப்பட்டுமிருந்தது.

## 2.7 கையிருப்புக் கட்டுப்பாடு

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கிலிடும் குறைபாடுகள் காரணமாக, ஆண்டிற்கான பாவனைச் செலவினம் மற்றும் ரூபா 23,253,070 க்கான கையிருப்புக் களஞ்சியமீதி என்பன நிதிசார் கூற்றுக்களில் சரிவரக் காட்டப்பட்டனவா எனக் கணக்காய்வில் உறுதிசெய்யப்படவில்லை.

(i) 2011 ஜுலை 31 வரை கொள்வனவு செய்யப்பட்ட கையிருப்பு செலவின விடயங்களில் ''வரவு'' வைக்கப்பட்டமை

(ii) 2011 ஆகஸ்ட் முதல் பயன்படுத்தப்பட்ட கையிருப்பினது ஆகுசெலவு கணக்குகளில் இடப்படாமை

(iii) 2008 ஆம் ஆண்டு முதல் மாறுபடின்றி முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 20,789,460 மீதியானது பொதுக் களஞ்சிய மீதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டமை

(iv) 2011 ஆகஸ்ட் முதல் டிசெம்பர் வரைக்குமான கொள்வனவுகளது பெறுமதியாகிய ரூபா 2,463,610

(v) ஆண்டின் இறுதியில் கையிருப்பு மீதி கணிப்பிடப்படாமை

(vi) கையிருப்புப் பேரேடு கணக்கிணக்கஞ் செய்யப்படாமை

## 2.8 மனைகளுக்கான திட்டம் அங்கீகரிக்கப்படுவதும் சான்றுறுதிப்படுத்தப்படுவதும்

மீளாய்வாண்டிடு முடிவில் வழங்குவதற்கு எஞ்சியிருந்த திட்டங்களும் சான்றுறுதிகளின் நிலைமையும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | விபரம் | ஆண்டு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 2010 | 2011 | |
| (i) | நிலத் தளத்திற்கான திட்டம் | 122 | 178 | 300 |
| (ii) | கட்டிடநிர்மாண வேலையும் மேலதிக சேர்ப்புகளும் | 73 | 95 | 168 |
| (iii) | இணக்கச் சான்றிதழ் வழங்கப்படுதல் | 46 | 48 | 94 |
| | | 241 | 321 | 562 |

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிசார் கட்டுப்பாடு

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(எ) ஆளணி முகாமைத்துவம்